## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண்.70/2020

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் நாள் வெள்ளிக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 16.02.2024 | தந்தை பெயர்: | ராஜாராவ் |
| பெயர்: | சுனிதா<br>(PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | ஸ்டேட் பாக் ஆப் இந்தியா<br>திருவெண்காடு<br>துணை மேலாளர், | சமயம்: | |
| சாதி: | | வயது : | 45/2023 |
| தொழில்: | வங்கி துணை மேலாளர். | | |

<u>**முதல் விசாரணை : 16.02.2024**</u>

நான் இவ்வழக்கின் வாதி வங்கி கிளையில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

24.11.2012-ம் தேதியிட்ட பிரதிவாதிகள் கடன் கேட்டு கொடுத்த கடன் விண்ணப்பத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 29.01.2013-ம் தேதியிட்ட பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் உடன்படிக்கையின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது**

**வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 29.01.2013–ம் தேதியிட்ட பிரதிவாதிகள் எழுதி கொடுத்த கடன் ஏற்பட்டு கடிதத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 29.01.2013–ம் தேதியிட்ட 1–ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த உயிர்பிப்பு கடிதத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 29.01.2013–ம் தேதியிட்ட 2–ம் பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதி கொடுத்த உயிர்பிப்பு கடிதத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது**.29.07.2019–ம் தேதியிட்ட கணக்கு பதிவேட்டின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி ஏற்கனவே தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.